[1975 மார்ச் 25]

Thiru G. Vasantha Pai rose.

MR. CHAIRMAN : Has the hon. Member Thiru Vasantha Pai got anything to say?

THIRU G. VASANTHA PAI : Sir, may I know whether Question No. 4788 is being adjourned?

MR. CHAIRMAN : It is an Unstarred Question.

உடுக்குறியிடாத வினாக்கள்.

Persons sent abroad at Government Expense

1. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House :

(*a*) a list containing the names of persons, who have been sent abroad at the expense of the Government during the last 5 years, year wise;

(*b*) their designation;

(*c*) the countries they visited;

(*d*) the reason for which they were sent abroad; and

(*e*) the expenses incurred by the Government on behalf of each of them?

A. A statement @ containing the particulars is placed on the table of the House .

மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த செவிலித் தாய்கள்.

2. கே.—திரு மா. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் எத்தனை பேர் செவிலித் தாயாகப் பணிபுரிந்து வருகின்றார்கள்?

ப.— 31 சதவிகித இடங்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர். மருத்துவ சமுதாயத்தைப் பற்றி தனி விபரம் இல்லை.

சந்தன மரங்கள்.

3. கே.—திருவாளர்கள் எஸ். வெள்ள பாண்டியன், எல். பலராமன் : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

@ 227-230 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 25.

(அ) இம்மாநிலத்தில், மாவட்ட வாரியாக, எந்தெந்தப் பகுதிகளில் வன இலாகாவினால் சந்தனக்கட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(இ) 1971-72-ஆம் ஆண்டு சந்தனக் கட்டைகள் விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த மொத்த வருமானம் மாவட்ட வாரியாக என்ன?

ப.—(அ) சந்தன மரங்கள், வட ஆற்காடு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள காடுகளில் அதிக அளவிலும், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மற்ற மாவட்டங்களிற் ஒரு சில இடங்களிலும், இயற்கையாக வளர்கின்றன. அவற்றின் பரப்பளவு மாவட்ட வாரியாக பின்வருமாறு:—

மாவட்டத்தின் பெயர்.	பரப்பளவு. (ஹெக்டேரில்)
தர்மபுரி	1,07,878.80
வட ஆற்காடு	89,942·00
சேலம்	36,407·42
மதுரை	1,200·00
இராமநாதபுரம்	1,590·43
திருநெல்வேலி	1,045·09
நீலகிரி	35,945·79
கோவை	1,34,277·40
திருச்சிராப்பள்ளி	10,004·00
தென் ஆற்காடு	1,113·69

இவை தவிர நீலகிரி, கோவை, சேலம், தருமபுரி, வட ஆற்காடு, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வனத் துறையால் சந்தன மரங்கள் செயற்கையாகவும் வளர்க்கப்படுகின்றன. 1972-73-ஆம் ஆண்டு வரை வன இலாக்காவால் பயிரிடப்பட்டுள்ள சந்தன மரங்களின் பரப்பளவு, மாவட்ட வாரியாக பின்வருமாறு:

மாவட்டத்தின் பெயர்.	1972-73 வரை பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு. (ஹெக்டேரில்)
தர்மபுரி	135
வட ஆற்காடு	129
சேலம்	83
மதுரை	69
இராமநாதபுரம்	44
திருநெல்வேலி	196
நீலகிரி	3
கோவை	326
மொத்தம்	985

1975 மார்ச் 25]

இவை நீங்கலாக, 1973-74-ம் ஆண்டில் 200 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் பயிர் செய்வதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1971-72-ஆம் ஆண்டில் சந்தன மர விற்பனையில் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் மாவட்ட வாரியாக பின்வருமாறு :

	ரூ.
வட ஆற்காடு	82,27,394·00
தருமபுரி	2,38,706·00
சேலம்	12,40,026·00
கோவை	23,16,539·00
நீலகிரி	1,21,645·00
இராமநாதபுரம்	75,841·00
திருச்சிராப்பள்ளி	2,36,550·00
மதுரை	5,039·49

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அதிகமான 'லெவி' யையும் சிவில் சப்ளைஸ் அதிகாரிகளின் தொந்தரவையும் எதிர்த்து தஞ்சாவூர் ஆட்சித் தலைவரிடம் தஞ்சாவூர் விவசாயிகளின் மகஜரும், அவர் அலுவலகத்துக்கு முன்பு உண்ணாவிரதமும் குறித்து.

மாண்புமிகு மேலவைத்தலைவர்: திரு. ஜி. சுவாமிநாதன் M. L .C. அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்:

" The massive procession, presentation of a petition of grievances to the District Collector and relay fast opposite Thanjavur Collectorate organised by the agriculturists of Thanjavur district at Thanjavur from today protesting against the abnormal and oppressive levy imposed on them in the existing condition of poor yield and also the untold suffering imposed on them due to harassment by the Civil Supplies officials who do not allow them to keep paddy even for seeds, agricultural operations and personal consumption. The protest is also against the open corruption by the officials especially in the lower levels who are engaged in levy operations. "

இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வரும் என்பதை உறுப்பினர் விளக்க வேண்டுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஆயிரக்கணக்கான தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஒரு ஊர்வலமாகச் சென்றார்கள். தற்சமயம் அரசாங்கத்தாராலே தஞ்சை மாவட்டத்திலே கையாளப்படுகின்ற கொள்முதல் முறையையும் லெவி முறையையும் கடுமையாக எதிர்த்து ஊர்வலம் சென்றார்கள். அது தவிர இந்த